### காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முடிவுகள் திறம்பட அமல்படுத்தப்படுவதை உறுதி செய்து

# ஒன்றிய அரசு தமிழக விவசாயிகளை பாதுகாக்க வேண்டும்!

## மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மானத்தில் கதிர் ஆனந்த் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக. 10 -

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான அறிவிப்பை அளித்துள்ளார்.



காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவு (காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டது) - பிலிகுண்டுலுவில் ஜூலை 29, 2026 முதல் 15 நாட்களுக்கு தினசரி 3,500 கனஅடி நீர் வெளியேற்றம் - சரியான நேரத்தில் திறம்பட அமல்படுத்தப்படாதது குறித்து மத்திய அரசு, குறிப்பாக ஜல் சக்தி அமைச்சகம் தோல்வியடைந்துள்ளது என்பதே இவ்விவகாரம்.

சட்டப்பூர்வ உத்தரவுகள் இருந்தபோதிலும், ஆரம்ப முக்கியமான காலத்தில் தேவையான நீர் உறுதி செய்யப்படவில்லை. பல நாட்கள் உண்மையான நீர்வரத்து மிகவும் குறைவாகவே இருந்தது. இதனால் கடுமையான குறைபாடு ஏற்பட்டு, காவிரி டெல்டா விவசாயிகளின் நின்று கொண்டிருக்கும் குருவைப் பயிரும், லட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரமும் உடனடி அபாயத்தில் உள்ளது. முக்கியமான பயிர் காலத்திற்குப் பிறகு வழங்கப்படும் நீர், ஏற்படும் சேதத்தை முழுமையாகத் தடுக்க முடியாது.

தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகி உத்தரவை அமல்படுத்தவும், திரண்ட குறைபாட்டை ஈடுகட்டவும் கோரியுள்ளது.

கதிர் ஆனந்த் கூறியதாவது:-

“காவிரிநீர்மேலாண்மை ஆணையத்தின் முடிவுகள் திறம்பட அமல்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசுக்கு நேரடி பொறுப்பு உள்ளது. முழு குறை பாட்டையும் உடனடியாக ஈடுகட்டவும், அவசர சி.டபிள்யூ.எம்.ஏ. கூட்டம் நடத்தவும், தினசரி சரிபார்க்கப்பட்ட நீர்வரத்து தரவை வெளியிடவும், தமிழக விவசாயிகளையும் நின்று கொண்டிருக்கும் பயிர்களையும் பாதுகாக்கவும் உடனடி தலையீட்டை நான் கோருகிறேன். நமது விவசாயிகளின் வாழ்வாதாரம் ஆபத்தில் இருக்கும்போது ஒன்றிய அரசு தனது கடமையை கைவிட முடியாது.”

இவ்வாறு கதிர் ஆனந்த் கூறினார்.




தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டி தொழிலாளர்கள் சார்பில் செங்குந்தர் அபிவிருத்தி சங்க செயலாளர் மாரிமுத்து தலைமையில் அனைத்துக் கட்சிகள் பங்கேற்று த.வெ.க.அரசை வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு பங்கேற்று கண்டன உரையாற்றினார். இதில் 1000,க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும்

# கலைஞர் முத்தமிழறிஞர் நினைவு நாள் புகழஞ்சலி! வளர்ச்சி குன்றியோர்க்கு உணவு!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பங்கேற்பு!

நெல்லை, ஆக.10 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் பணகுடி பேரூர் கழகம் சார்பில் பணகுடி பேருந்து நிலையம், வள்ளியூர் பேரூர் கழகம் சார்பில் வள்ளியூர் பழைய பேருந்து நிலையம், இராதாபுரம் ஒன்றிய கழகம் சார்பில் இராதாபுரம் பேருந்து நிலையம், நாங்குநேரி ஒன்றிய கழகம் சார்பில் நாங்குநேரி ஒன்றிய கழக அலுவலகம் ஆகிய இடங்களில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி ஏற்பாட்டில் அணைக்கரை மெர்சி ஹோம் வளர்ச்சி குன்றியோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் மாவட்டப் பொறுப்பு குழு உறுப்பினர்கள் நம்பி,சந்திரகலா, இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி,நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம்,பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் விவசாய அணி மாடசாமி,தொண்டரணி முருகன், வழக்கறிஞரணி பாலசந்தர், அறங்காவலர்குழு தலைவர் அசோக்குமார், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் முன்னாள் துணை தலைவர் ஆதி பரமேஸ்வரன்,பேரூராட்சிமன்ற தலைவர் தனலெட்சுமி, பணகுடி பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் புஷ்பராஜ்,ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்வேல், முருகேசன்,அந்தோணி அருள்,பலவேசம் என்ற சபாபதி, ஊராட்சிமன்ற துணைத்தலைவர் புஷ்பபாண்டி,பேச்சியப்பன்,ஒன்றிய அவைத்தலைவர் ராமையா,ஒன்றிய துணைச் செயலாளர்கள் கென்னடி சு.செழியன், வாழவந்த கணபதி பாலன், பேரூராட்சி துணை செயலாளர்கள் ஜெயராஜ்,மல்லிகா,ஜான்சிராஜம், குமரகுரு,அணி துணை அமைப்பாளர்கள் மு.க.மாணிக்கம்,ஆச்சியூர் ராமசாமி, காதர் முகைதீன்,வழக்கறிஞர் தவசிராஜன்,சுப்பிரமணி,சந்திரசேகர்,கோபி கோபாலகண்ணன், தில்லை ராஜா, சுரேஷ் ராஜா,சிவா,ஆபிரகாம்,சுப்பையா,முரளி, பொன் இசக்கியம்மாள், இசக்கிதாய், ராஜேஸ்வரி,பாக்கியதாய்,வள்ளி, வசுமதி, அவைத் தலைவர் மாடசாமி, அன்பரசு, ராமையா,

வெற்றிவேல், தாமஸ்குமார், எட்வின், இசக்கிராஜா,சிங்கராஜ், பெருமாள், பிரஷாந்த், அன்னம், வெள்ளைசாமி, ரஞ்சித்,சுடலையாண்டி, ஜெபாஸ்,துரைநடராஜன்,வாசுதேவன், அருள்ராஜ் டார்வின்,சங்கர், வானுமாமலை,குமார், வர்க்கீஸ், ராஜேந்திரன்,ரவி அருணாசலம், சங்கரபாண்டி, பால முருகன், ஜெஸ்டின், முத்து, கோவில் பிச்சை, நயினார், சங்கரபாண்டி, முருகன், அன்னபாண்டி, ரமேஷ், ஆல்ட்ரின், மகேந்திரன், செங்கராஜன்,ஜெயபாலன்,நம்பிராஜன், கோமதி சங்கர், கார்த்திக்ராஜா, தனுஷ், பண்டாரம், ஆறுமுகம்,நம்பி,ஞானசேகர், மணிகண்டன், பார்த்திபன், முரளி, கோவிந்தராஜ், இசக்கி பாபு, எஸ்தாக் கெனிஸ்டன், சுப்பையா, வேணுகோபால், இ.சுப்பிரமணியன், மகேஷ், சதீஷ், ஜெபஸ்டின் நிமலேஷ், தக்காளிகுமார், கருணைராஜ்,செல்வகணேஷ்,பாக்கியம், விக்டர் ஜான்சன், பால்ராஜ், பெருமாள், ஐயாகுட்டி,நாகராஜ்,சந்தனகுமார், சுப்பையா, கல்யாணி,இசக்கியப்பன், தர்மராஜ்,மகேந்திரபுரம்,ஆறுமுகம்,புல்லட் பெருமாள், ராமசாமி,தங்கராஜ்,சுப்பையா, ஐயப்பன்,சண்முகசுந்தரம்,திரவியம், டெர்மின்ராஜா,மிக்கேல்,ஆறுமுகம்,பப்பு அந்தோணி மார்க்ளின்ஸ்,அஜித் மிக்கேல், மன்றோ,கனகராஜ், குணசேகரன்,மும்பை கிறிஸ்டோபர்,மெர்லின் கோகுல், மைக்கிள்,ஜெபஸ்டின் ராஜன், ரவி ஆர்டிஸ்ட், திலகர், கார்த்திக், ஜூலியஸ், கண்மணி,இருளப்பன்,சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மேகதாது – காவிரிப் பிரச்சினையில் முதல்வர்

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியது காலத்தின் அவசியம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 10 –

”மேகதாது – காவிரிப் பிரச்சினையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் கூட்ட வேண்டியது காலத்தின் அவசியம் என்று ”தினகரன் நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 9.8.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:


தினகரன்

ஆகஸ்ட் 9, 2026 ஞாயிற்றுக்கிழமை

காலத்தின் அவசியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமான 16 லட்சம் ஏக்கர் டெல்டா பாசனத்திற்கு உயிரூட்டுவது காவிரிநீர். குடகு மலையில் ஊற்றெடுத்து, தமிழ்நிலத்தில் பொங்கி பிரவாகம் எடுக்கும் காவிரி நீரின் உரிமைக்காக பல்லாண்டுகளாக நாம் போராடி வருகிறோம். பெரும் சட்டப்போராட்டங்களையும் சந்தித்துள்ளோம். கடந்த கால அரசுகளின் கடும் முயற்சியால் இதற்குரிய தீர்வு கடந்த 2018ம் ஆண்டு கிடைத்தது.

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு ஆண்டுக்கு 177.25 டிஎம்சி தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். இதை காவிரி மேலாண்மை ஆணையம் கண்காணிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இறுதி தீர்ப்பு வழங்கியது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இந்த நீரை தமிழகம் பெறுவது என்பது குதிரைக்கொம்பாகவே உள்ளது. உரிய நேரத்தில் காவிரி நீரை கர்நாடகம் திறந்து

தமிழகத்தின் நெற்களஞ்சியமான 16 லட்சம் ஏக்கர் டெல்டா பாசனத்திற்கு உயிரூட்டுவது காவிரிநீர். குடகு மலையில் ஊற்றெடுத்து, தமிழ்நிலத்தில் பொங்கி பிரவாகம் எடுக்கும் காவிரி நீரின் உரிமைக்காக பல்லாண்டுகளாக நாம் போராடி வருகிறோம். பெரும் சட்டப்போராட்டங்களையும் சந்தித்துள்ளோம். கடந்த கால அரசுகளின் கடும் முயற்சியால் இதற்குரிய தீர்வு கடந்த 2018ம் ஆண்டு கிடைத்தது.

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு ஆண்டுக்கு 177.25 டிஎம்சி தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். இதை காவிரி மேலாண்மை ஆணையம் கண்காணிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இறுதி தீர்ப்பு வழங்கியது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இந்த நீரை தமிழகம் பெறுவது என்பது குதிரைக்கொம்பாகவே உள்ளது. உரிய நேரத்தில் காவிரி நீரை கர்நாடகம் திறந்து விடுவதில்லை. ஆனால் பெருமழைக்காலங்களில், அங்குள்ள அணைகளில் கட்டுப்படுத்த முடியாத உபரிநீரை தமிழகத்திற்கு திறந்து விடுகிறது.

இதையே தமிழகத்திற்கு வழங்கப்பட்ட காவிரிநீர் என்று ஆணையத்திடம் கணக்கும் காட்டி வருகிறது கர்நாடகம். இப்படிப்பட்ட நிலையில் அந்த உபரிநீர் கூட, தமிழகத்திற்கு வந்து விடக்கூடாது என்று திட்டமிட்டுள்ளது கர்நாடகம். அங்குள்ள ராமநகரா மாவட்டத்தில் மேகதாது என்னும் இடத்தில் பிரமாண்ட அணை கட்டுவதற்கான ஆயத்த பணிகளில் முழுவீச்சில் இறங்கியுள்ளது. இதற்கு ஒன்றிய அரசின் நீர்வளத்துறை மறைமுக அனுமதியை வழங்கியுள்ளதாகவும் தகவல் கசிந்து வருகிறது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி நீர் திறக்கப்பட்டு வந்தது. நடப்பாண்டு கர்நாடகம் உரியநீரை வழங்காததால் அதற்கு வாய்ப்பே இல்லாமல் போனது. இதுதொடர்பாக 2 முறை நடந்த காவிரி ஆணைய கூட்டத்திலும் நீரை திறக்க மறுப்பு தெரிவித்து முரண்டு பிடித்தது கர்நாடகம். உரிய காலத்தில் குறுவை சாகுபடிக்கு நீர் கிடைக்காததால் வேதனையின் உச்சத்தில் இருக்கிறார்கள் தமிழக விவசாயிகள். அதேநேரத்தில் டெல்டாவை பாலைவனமாக்கும் மேகதாது திட்டத்தில் தீவிரம் காட்டுகிறார்கள் கர்நாடக அரசியல் தலைவர்கள்.

ஆனால் இதற்குரிய ஆலோசனைகள் நடத்தி தீர்வுகளை முன்னெடுக்க வேண்டிய தமிழக முதல்வரோ, அலட்சியமாக இருக்கிறார். தமிழகத்திற்கு நீர் தரக்கூடாது என்பதில் கர்நாடகத்தின் அனைத்து கட்சிகளும் ஓரணியில் நின்று ஒற்றுமை காட்டுகிறது. ஆனால் தமிழகத்தில் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஆலோசிக்க வேண்டிய முதல்வர், வெகுதூரம் விலகி நிற்கிறார்.

உயிர்நாடியான உணர்வுப்பூர்வ பிரச்னையில் அனுபவமுள்ள அரசியல் கட்சிகளை அழைத்து இதற்கான கூட்டத்தை உடனடியாக நடத்தி இருக்க வேண்டும். அரசியல் களத்தில் வேறுபாடுகள் இருந்தாலும், வாழ்வாதார பிரச்சினையில் அனைவரும் ஒன்றிணைந்து நிற்கிறோம் என்பதை முரண்டு பிடிக்கும் கர்நாடகத்திற்கும், பிரச்சினையில் இரண்டுமுகம் காட்டும் ஒன்றிய அரசுக்கும் உணர்த்தியிருக்க வேண்டும். நடந்து வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் கூட, முதல்வர் விஜய் தலைமையிலான தவெக தவிர்த்து அனைத்து கட்சிகளும் வைக்கும் ஒருமித்த கோரிக்கை இதுதான்.

ஆட்சி சார்ந்த அதிகாரம் என்பது மக்கள் அளித்த தீர்ப்பு. அந்த தீர்ப்பை மதித்து அனுபவமுள்ள மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளை கேட்டு மாநிலத்தை வழிநடத்துவது ஆட்சிக்கு சிறப்பு சேர்க்கும். மாறாக நான் எதற்கும் செவிசாய்க்க மாட்டேன் என்றால், அது மக்கள் மனதில் வெறுப்பை மட்டுமே விதைக்கும். இதை உணர்ந்து அனைத்து கட்சி கூட்டத்தை முதல்வர் கூட்ட வேண்டியது காலத்தின் அவசியம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### மதுரை மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு வளர்ச்சி நிதி

# ரூ.25 இலட்சத்தை உடனடியாக விடுவிக்க கோரிக்கை!

## மாநகராட்சி ஆணையரிடம் தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் மனு!

மதுரை, ஆக. 10 -

மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு வளர்ச்சி நிதி ரூ.25 லட்சத்தை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி, மாமன்ற திமுக உறுப்பினர்கள் மாநகராட்சி ஆணையர் கௌரவ் குமாரிடம் சனிக்கிழமை மனு அளித்தனர்.




அவர்கள் அளித்த மனு விவரம் வருமாறு:

மதுரை மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் மண் டல அளவிலான கூட்டத்தை நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் மாநகராட்சி வார்டு பகுதிகளில் ஆய்வு நடத்தும் போது, அந் தந்த வார்டு உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

ஆனால், தற்போது இந்த நடைமுறை பின்பற்றப்படுவ தில்லை. மேலும், ஆளும் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் தெரிவிக்கும் குறைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படுகிறது.

ஆனால், மாமன்ற உறுப்பினர்கள் கூறும் குறைகளுக்கு அதிகாரிகள் உரிய தீர்வு காண் பதில்லை. ஒவ்வொரு மாமன்ற உறுப்பினருக்கும் வார்டு வளர்ச்சி நிதியாக ரூ.25 லட்சம் வழங்கப்பட வேண்டும்.

இதுவரை இந்த நிதி ஒதுக் கீடு செய்யப்படவில்லை. எனவே, மாநகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கை எடுத்து, மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு வளர்ச்சி நிதி ரூ.25 லட்சத்தை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டது.

### தென்காசி தெற்கு மாவட்டம்

# கலைஞர் நினைவு நாள் 30 இடங்களில் புகழஞ்சலி!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்பு!

தென்காசி, ஆக. 10 -

தென்காசி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவேந்தல் முன்னிட்டு மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இதில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன் பங்கேற்று 7 இடங்களில்

அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதன்படி தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் சுரண்டை நகர பேருந்து நிலையம்,பாவூர்சத்திரம், திப்பணம்பட்டி மைதானம்,தென்காசி காந்தி சிலை,தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், குத்துக்கல்வலசை மற்றும் பிரானூர் பார்டர் ஆகிய 7 இடங்களில் நடைபெற்ற நினை வேந்தல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு,கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ரமேஷ், அழகுசுந்தரம், திவான் ஒலி,ஷேக் முகமது, நகர செயலாளர்கள் தென்காசி சாதிர், சுரண்டை கணேசன், செங்கோட்டை வெங்கடேசன், பேரூர் செயலாளர் முத்தையா, மாவட்டத் துணை செயலாளர் கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் அருள், ரஹீம், தட்சிண மாற நாடார் சங்கத் தலைவர் காளிதாஸ், கழக கல்வியாளர் அணி இணைச் செயலாளர் ஆலடி எழில்வாணன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாக்ரடீஸ், கீழப்பாவூர் ஒன்றியக் குழுத் தலைவர் காவேரி சீனித்துரை, மாவட்ட அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கிளைக,வார்டு கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து உட்பட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



கழக முன்னோடி பேரா.மு.பி.பா என்கிற மு.பி.மணிவேந்தன் அவர்களின் இல்ல விழாவில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு செல்வி வைணவி மணிவண்ணனை வாழ்த்தினர். உடன் மு.பி. பா.அன்புச்செழியன், சோபியா அன்புச்செழியன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், துணைச் செயலாளர் அனந்தன், மு.பி.பா பெயரன் மணிவண்ணன், அய்யாபுரம் கிளை செயலாளர் செல்வக்குமார், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான், அறங்காவலர் உறுப்பினர் சுந்தராஜ், மற்றும் பலர் உள்ளனர்.